சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

மு.வ.எண்.135/2018

பெயர் திருமதி.துளசி க/பெ.வெங்கடேசன் நாள்.02.02.2026

**<u>பிரதிவாதி சாட்சி 1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. வெங்கடேசனுடன் பிறந்தவர்கள் ஆதிகேசவன், கணேசன் மற்றும் நாராயணன் ஆவர். வெங்கடேசனின் தகப்பனார் பெயர் ஸ்ரீராம். வழக்கு கிராமத்தில் ஸ்ரீராமிற்கு பூர்விக சொத்துகள் உள்ளதா என்றால் அதுபோல் ஏதும் இல்லை. வழக்குச் சொத்தின் புல எண்கள் எனக்கு தெரியாது. அடையணச்சேரி கிராமத்தில் உள்ள சொத்து, யார் பெயரில் பட்டா உள்ளது என்றும், யார் பெயரில் இருந்தது என்றும் எனக்கு நியாபகம் இல்லை. அடையணச்சேரி தாவா சொத்துகளில் நாங்கள் பாகம் கோரவில்லை என்றால் சரிதான். வெங்கடேசனின் பூர்விக சொத்துகளை விற்றும், அதில் வந்த வருமானத்தை வைத்து, கூவத்தூர் சொத்துகள் வாங்கப்பட்டதா என்றால் சரியல்ல. கூவத்தூர் சொத்துகள் எப்போது வாங்கப்பட்டது என நியாபகம் இல்லை.

2. கூவத்தூர் சொத்துகள் கிரையம் பெறும் போது கூவத்தூர் பதிவு அலுவலகத்திற்கு நான் செல்லவில்லை. அதை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால், என் கணவர் கிரையம் பெற்று வந்து என்னிடம் கூறினார். கிரையம் வாங்கும் போது அது காலிமனை என்றால் சரிதான். அதன் பிறகு தான் அதில் கடை மற்றும் வீடு கட்டப்பட்டது என்றால் சரிதான். 1ம் வாதி வங்கியில் கடன் பெற்று தான்

கடை மற்றும் வீட்டைக் கட்டினார் என்றால் சரியல்ல. 2ம் வாதி தான் வழக்கு சொத்தில் கடை நடத்தி வருகிறார் என்றால் இல்லை. வாதிகள் அடையளச்சேரி கிராமத்திலுள்ள வழக்கு சொத்தில் தான் வசிக்கிறார்கள் என்றால் சரிதான். 2ம் வாதி கூவத்தூர் வீட்டிலும் இருப்பார் என்றால் இல்லை. கூவத்தூர் சொத்துகளில் வாதிகளுக்கும் பங்கு உண்டு என்று சொன்னால் இல்லை.

3. கூட்டுக் குடும்ப வருமானத்தை வைத்து கூவத்தூர் சொத்துகள் 1ம் பிரதிவாதி பெயரில் கிரையம் வாங்கப்பட்டது என்றாலும், அவை கூட்டுக் குடும்ப சொத்துகள் என்றாலும், அதில் வாதிகளுக்கும் பாகம் உண்டு என சொன்னாலும் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு தனிப்பட்ட உரிமை ஏதும் கிடையாது என்றால் சரியல்ல. வழக்கு சொத்துகள் கூட்டுக் குடும்ப சொத்துகள் என்றாலும், அதில் 1ம் பிரதிவாதிக்கு தனிப்பட்ட உரிமை இல்லை என்றாலும் எனக்கு கவனம் இல்லை. 1ம் பிரதிவாதியின் மனைவி என்பதற்கு நான் ஆவணம் ஏதும் தாக்கல் செய்யவில்லை. 1ம் பிரதிவாதி, 3ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் எழுதி வைக்க உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. அந்த ஆவணம் செல்லத்தக்க ஆவணம் அல்ல என்றாலும், அது வாதிகளுக்கு எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றாலும் சரியல்ல. வாதிகள் பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியும். வாதிகள் கோரியவாறு தீர்ப்பாக வேண்டுமென்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.